# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 28/மா/2026**

**நாள்: 30.03.2026**

V. ராஜா
பாலக்கரை, திருச்சிராப்பள்ளி --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி–8, பாலக்கரை, ஜெயில்பேட்டை, குடிசை மாற்று வாரியம், 'B' பிளாக், எண் 93 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V.ராஜா என்பவரின் 18.08.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.08.2025 அன்று பெறப்பட்டு 28/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி–8, பாலக்கரை, ஜெயில்பேட்டை, குடிசை மாற்று வாரியம், 'B' பிளாக், எண் 93 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V. ராஜா என்பவர் தனது 18.08.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"திருச்சி மாநகராட்சி வார்டு எண் 30 பகுதியில் கிட்டதிட்ட 288 வீடுகளை கவர்மெண்ட் கட்டி உள்ளது.

இப்பகுதியில் உள்ள சுகாதார சீர்கேட்டை அகற்ற பலமுறை மாண்புமிகு ஆணையர், துணை ஆணையர், சுகாதார ஆய்வாளர், துப்புரவு ஆய்வாளர் மற்றும் குடிசை மாற்று வாரிய அதிகாரிகளுக்கு பல முறை நேரிலும், பதிவு தபால் மற்றும் தபால் மூலம் மனுக் கொடுத்தும் எவ்வித பயனும் இல்லை.

கேட்டால் இங்கு உள்ள எவரும் வாடகை செலுத்துவது இல்லை. எனவே செய்வது இல்லை என சாக்கு போக்கை கூறி வருகின்றார்கள்.

மாநகராட்சி ஆணையர் மெத்தன போக்காக உள்ளார். அவர் உடைய அலட்சியக் காரணத்தால் இப்பகுதி வசிக்கும் நாங்கள் அடிப்படை வசதி செய்து கொடுக்காத இடத்தில் தொடர் நோயால் அவத்தைபட்டு வருகின்றோம். கழிவுநீர் சூழ்ந்து, வியாதிகளையும் உருவாக்கி வருகின்றது. சுற்றி குப்பை கூளம்.

எனவே, உடனடியாக இம்மனுவையும், இணைத்து உள்ள புகைப்படத்தையும் பார்வையிட்டு, வழக்கை பதிவு செய்து மாண்புமிகு மாநகராட்சி ஆணையர் அவர்களை வரவழைத்து தக்க விசாரணை நடத்தி நிரந்தமாக இப்பகுதியை சுகாதார சீர்கேட்டை தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கவும், நடவடிக்கை எடுக்காமல் இருக்கும் அதிகாரிகள் மீது தக்க துறை சார்ந்த நடவடிக்கை எடுக்கவும் உத்தரவு இட வேண்டுகின்றேன்."

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 27.10.2025 நாளிட்ட கடிதம் மூலம் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையர் தனது 12.12.2025 நாளிட்ட கடிதம் ந.க. எண் எச்1/3610/2025 (வா.கு–II)–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம்–II, வார்டு எண் 30 பகுதியில் சுகாதார கேடு ஏற்படுவதாகவும், கழிவு நீர் சூழ்ந்து வியாதிகளை உருவாக்குவதாகவும், சுகாதார சீர்கேட்டை தடுத்து அதனை சீர் செய்ய கோரி மனுவில் கோரியுள்ளார்.

மேற்படி திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம்–IIற்குட்பட்ட, வார்டு எண் 30 ஜெயில் பேட்டை பகுதியில் சுத்தம், சுகாதாரம் குறைவாக உள்ளதாக மனுவில் தெரிவித்துள்ளதன் அடிப்படையில் அந்த பகுதி முழுவதும் சுத்தம் செய்யப்பட்டது என்பதையும், பாதாள சாக்கடை தொட்டிகள் சுத்தம் செய்யபப்பட்டு நல்ல நிலையில் உள்ளது என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 24.02.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் தனது 24.02.2026 நாளிட்ட மின்னஞ்சலில் தனது சித்தப்பா இறப்பு நிகழ்வு காரணமாக மேற்படி விசாரணைக்கு வர இயலவில்லை என்றும், வேறு தேதிக்கு மறு விசாரணைக்கு அனுமதிக்குமாறு கோரியுள்ளார்.

6. எதிர்மனுதாரர் தரப்பில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம்–II உதவிப் பொறியாளர் மற்றும் சுகாதார அலுவலர் ஆகியோர் 24.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

"மனுதாரர் வசிக்கும் வார்டு 30, ஜெயில்பேட்டை என்ற இடமானது தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு சொந்தமானது. அங்குள்ள சாலைகள், பூங்காக்கள் ஆகியவை திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்படவில்லை. இருப்பினும், மனுதாரர் கோரியவாறு மனுதாரர் இடத்தில் தேங்கி இருந்த கழிவு நீர் மற்றும் முட்புதர்கள் திருச்சி மாநகராட்சியால் அகற்றப்பட்டுவிட்டது மேலும் தினசரி உருவாகும் குப்பைகளை அகற்றிடவும், சாக்கடை அடைப்புகளை சரி செய்திடவும், இரண்டு தூய்மை பணியாளர்கள் நியமிக்கப்பட்டு சுகாதாரப்பணிகள் தொய்வின்றி நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்."

7. மனுதாரர் தனது 24.02.2026 நாளிட்ட மின்னஞ்சலில் கோரியவாறு, மனுதாரர் மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 17.03.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.02.2026 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழைப்பாணையின் நகல் எதிர்மனுதாரரான திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கும் அனுப்பப்பட்டது.

8. மனுதாரர் 17.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"திருச்சி மாநகராட்சி வார்டு எண்.30–ல் உள்ள எங்கள் பகுதியில் 288 வீடுகள் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தால் கட்டப்பட்டு சுமார் 2000 நபர்கள் வசித்து வருகிறார்கள். எங்கள் இடத்தில் உள்ள தெருக்களை திருச்சி மாநகராட்சியால் சுத்தம் செய்யப்படாமலும், கழிவு நீர் அகற்றாமலும், இருப்பதால் சுகாதாரக்கேடு ஏற்படுகிறது. இதனால் குழந்தைகள் மற்றும் வயோதிகர்கள் மிகவும் பாதிப்பு அடைகிறார்கள். இது

குறித்து திருச்சி மாநகராட்சிக்கு புகார் மனு அளித்தால் உங்கள் பகுதி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு சொந்தமான இடம் என்று கூறி தட்டிக் கழிக்கிறார்கள். தமிழ்நாடு குடிசைமாற்று வாரியமும் இது குறித்து அக்கரைக் கொள்ளவில்லை. இருவரும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் கூறி தங்களுடைய கடமையை செய்யவில்லை.

நான் இம்முறைமன்ற நடுவத்திற்கு மனு அளித்தப்பின் கழிவு நீரை அகற்றினார்கள். ஆனால் முழுமையாக அகற்றவில்லை. மேலும் திருச்சி மாநகராட்சியால் தூய்மை பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டதாக தெரிவித்த நிலையில் இதுவரை எந்த தூய்மை பணியாளரையும் நியமனம் செய்யவில்லை. சென்ற வாரம் எங்கள் தெருக்களில் கழிவு நீர் பெருக்கெடுத்து ஓடியதால் ரூ.2000/– எனது சொந்த செலவில் வெளி நபர்களை அழைத்து வந்து கழிவு நீரை அகற்றினேன்.

எனவே, குழந்தைகள் மற்றும் பெரியோர்கள் நலன் கருதி தினந்தோறும் தெருக்களை சுத்தம்படுத்தவும் மாதம் ஒருமுறை கழிவு நீரை வெளியேற்றவும், திருச்சி மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறும், மேலும் சுகாதார சீர்கேட்டினை தடுக்க தவறிய திருச்சி மாநகராட்சியின் சம்மந்தப்பட்ட அலுவலர் மீது நடவடிக்கை எடுக்குமாறும் இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கண்ட வாக்குமூலம் எனக்கு படித்துக் காட்டப்பட்டு என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.''

9. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரர் தரப்பில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கை, வார்டு குழு அலுவலகம்–II உதவிப் பொறியாளர் மற்றும் சுகாதார அலுவலர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு எண்.30–ல் உள்ள பகுதியில் 288 வீடுகள் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தால் கட்டப்பட்டு சுமார் 2000 நபர்கள் வசித்து வரும் இடத்தில் உள்ள தெருக்களை திருச்சிராப்பள்ளி மாநகராட்சியால் சுத்தம் செய்யப்படாமலும், கழிவு நீர் அகற்றாமலும், இருப்பதால் சுகாதாரக்கேடு ஏற்பட்டு, குழந்தைகள் மற்றும் வயோதிகர்கள் மிகவும் பாதிப்பு அடைகிறார்கள் என்பதும், இதனை திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு புகார் மனு அளித்தால் அப்பகுதி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு சொந்தமான இடம் என்றும் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியமும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு மனு அளித்தப்பின்பு தான் கழிவு நீரை அகற்றப்பட்டது என்பதும், ஆனால் முழுமையாக அகற்றப்படவில்லை. என்பதும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியால் தூய்மை பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டதாக தெரிவித்திருந்தாலும், இதுவரை எந்த தூய்மை பணியாளரையும் நியமனம் செய்யவில்லை என்பதும், மனுதாரருடைய தெருக்களில் கழிவு நீர் ஓடியதால் ரூ.2000/– தனது சொந்த செலவில் வெளி நபர்களைக் கொண்டு கழிவு நீரை அகற்றினார் என்பதும், குழந்தைகள் மற்றும் பெரியோர்கள் நலன் கருதி தினந்தோறும் தெருக்களை சுத்தம்படுத்தவும் மற்றும் மாதம் ஒருமுறை கழிவு நீரை வெளியேற்றவும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பதும், சுகாதார சீர்கேட்டினை தடுக்க தவறிய திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் சம்மந்தப்பட்ட அலுவலர் மீது நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குடியிருக்கும் வார்டு 30, ஜெயில்பேட்டை என்ற இடமானது தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு சொந்தமானது என்பதும், அங்குள்ள சாலைகள், பூங்காக்கள் ஆகியவை திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்படவில்லை என்றாலும், மனுதாரர் கோரியவாறு மனுதாரர் இடத்தில் தேங்கி இருந்த கழிவு நீர் மற்றும் முட்புதர்கள் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியால் அகற்றப்பட்டுவிட்டது என்பதும், தினசரி உருவாகும் குப்பைகளை அகற்றிடவும், சாக்கடை அடைப்புகளை சரி செய்திடவும், இரண்டு தூய்மை

பணியாளர்கள் நியமிக்கப்பட்டு சுகாதாரப்பணிகள் தொய்வின்றி நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும் எதிர்மனுதாரர் தரப்பில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கை, உதவிப் பொறியாளர் மற்றும் சுகாதார அலுவலர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு எண்.30, ஜெயில்பேட்டை உள்ள பகுதியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகளின் தெருக்களில் தேங்கியிருந்த கழிவு நீர் மற்றும் முட்புதர்கள் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியால் அகற்றப்பட்டும், இரண்டு தூய்மை பணியாளர்கள் நியமிக்கப்பட்டு சுகாதாரப்பணிகள் தொய்வின்றி நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவிப் பொறியாளர் மற்றும் சுகாதார அலுவலர் ஆகியோரின் வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தாலும், மனுதாரர் அதனை மறுத்துள்ள நிலையில், பிரிவு, 175 தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998–ன்படி புகராளிக்கப்பட்டுள்ள பகுதியில் குப்பைகள் மற்றும் கழிவுநீர் முறையாக அகற்றப்பட்டு பொது சுகாதாரம் பேணுமாறும் மேற்கண்ட தூய்மைப் பணியாளர்கள் சுகாதாரப் பணிகளை தொடர்ந்து செய்து வருவதை உறுதி செய்திடவும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. V. ராஜா,
பிளாக் எண் 93, தமிழ்நடு குடிசை மாற்று வாரியம்,
ஜெயில்பேட்டை, பாலக்கரை, திருச்சி–8

(2) ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.

(3) உதவி ஆணையர்,
வார்டு குழு அலுவலகம்–II, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

10/4/26
செயலாளர்.
10/4/26